## வலுவாதார அபிவிருத்திச் சபை - 2022

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

வலுவாதார அபிவிருத்திச் சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றத்திலான கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான திக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 **நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்படு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வுநியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாக என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நிறுவகத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் சபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக என்பதும் ஆகும்.

### 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்படுகின்றது

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 41 ஆம் பிரிவு மற்றும் 2019 சனவரி 12 ஆம் திகதிய DMA/ 01 – 2019 இலக்க முகாமைத்தவ கணக்காய்வு | மீளாய்வாண்டினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூடட்ம் நடாத்தப்பட்டு இருக்கவில்லை. | மீளாய்வாண்டிலும் சபைக்காக தலைவர் ஒருவரை நியமித்தல் தாமதமாகி இடம் பெற்றது. மேலும் பதவியணியனரை தீர்மானிக்கும் போது உள்ளக கணக்காய்வு பிரிவொன்று / | சட்டங்கள் விதிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | திணைக்களத்தின் சுற்றிக்கையின் 05 ஆம் பந்தி | | உள்ளக கணக்காய்வு பதவியொன்று உருவாக்குதல் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. இது தொடர்பாக வரிசை அமைச்சை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாண கோவை 756(6) | மீளாய்வாண்டிற்கான பண்டக கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | பண்டக கணிப்பீட்டிற்கு தேவையான ஆரம்ப செயற்பாடுகள் தற்போது மேற்கொண்டுள்ளதுடன் விரைவில் பண்டக கணிப்பீடு அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்க ஆலோசனை வழங்கப்பட்டது. | சபையின் பௌதீக சொத்துக்களின் நிலைத்திருத்தலை உறுதி செய்து கொள்ள பண்டக கணிப்பீட்டை மேற்கொள் நடவடிக்கை எடுக்க வேண்டியதாக. |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய PEC 01/2021 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | வலுவாதார அபிவிருத்திச் சபையின் மீளாய்வாண்டிற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்க வேண்டிய போதும், அந் நிதிக்கூற்றுக்கள் 02 மாதங்களிற்கு அதிக காலம் தாமதத்தின் பின்னர் 2023 மே 12 திகதி கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டு இருந்தது. | மீளாய்வாண்டிற்கு உரிய நிதிக்கூற்றுக்களை உரிய திகதிக்கு முன்னர் அதாவது 2023/02/27 திகதி கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய திகதிக்கு நிதிக்கூற்றுக்களை சமர்பிப்பக வேண்டியதாக. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,689,193 ஆன மிகையாக காணப்பட்டதுடன் அதனோடு ஒத்த கடந்த ஆண்டின் மிகை ரூபா 3,074,662 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,614,531 ஆன வளர்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இவ் வளர்ச்சிக்கு செயற்பாட்டு செலவினம் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 இலக்க இலங்கை வலுவாதார அபிவிருத்தி சட்டத்தின் 10 (ஆ) பிரிவு பிரகாரம் குறித்த அனைத்து தரப்பினரும் மற்றும் ஒன்பது மாகாண சபைகளிடமும் விசாரித்து மற்றும் அவற்றின் ஒறுமைப்பாட்டுன் வலுவாதார அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை மற்றும் மூல உபாயத்தை தயாரித்து அங்கீகாரத்திற்காக அமைச்சரவைக்கு சமர்பிக்க வேண்டிய போதும் 2019 செப்டம்பர் மாதம் முதல் செயற்படும் இச்சபை அறிக்கை திகதி வரையும் 3 ஆண்களிற்கு அதிக காலம் கடந்திருந்த போதும் சட்டத்தில் குறிபிடப்படும் அடிப்படை பணிகளை மேற்கொண்டிருக்கவில்லை. | வலுவாதார அபிவிருத்தி மீதான தேசிய செயற்குழுவொன்று (National Steering Committee on SDGs) பிரதமரின் தலைமையில் நியமிக்க செயற்பட்டுள்ளதுடன் வலுவாதார இலக்கு பதினேழு (17) மற்றும் அதனுடன் தொடர்பான 169 நோக்கங்களை அடைந்து கொள்ள அந்த அந்த விடயப் பரப்பிற்கு உரியதாக நிறுவனத்தை ஒழுங்கமைத்தல் (Mainstreaming) செயற்பட்டுள்ளது.<br><br>இதற்கு மேலதிகமாக ஒவ்வொறு விடயத்திற்குரிய தேசிய கொள்கைக்கு இணங்கும் வகையில் வலுவாதார இலக்குகளை உற்படுத்த தேவையான ஒருங்கிணைப்பு வலுவாதார அபிவிருத்தி சபையினால் மேற்கொள்ளப்பட்டது. மேலும் அவ்வப்போது முன்வைக்கப்படும் கோரிக்கை மற்றும் விடயம் சார்ந்த நிறுவனங்களில் ஏற்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் அந்த அந்த விடயப் பரப்பிற்குரிய வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை உட்படுத்த தேவையான ஒருங்கிணைப்பினை வலுவாதார அபிவிருத்தி சபையினால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் வலுவாதார அபிவிருத்தி மீதான தேசிய கொள்கைகள் மற்றும் மூல உபாயத்தை தயாரித்து அங்கீகாரத்திற்கு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க வேண்டியதாக. |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் 14 வெற்றிடங்கள் அதாவது 73.6 சதவிதமான வெற்றிடங்கள் நிலவியதாக அவதானிக்கப்பட்டன. | அரசாங்க செவையின் ஆட்சேர்ப்பபு மட்டுப்படுத்தப்பட்டமை இதற்கு காரணமானது. வலவாதார அபிவிருத்தி சபையை பேணிச் செல்வதற்கான ஆளணி தேவையானதால் அரச சேவையின் உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்காக கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அடுத்துவரும் மீளாய்வாண்டினுள் (2023) அதற்காக கனிசமான பதிலொன்றை பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கிறது. | முறையாக நடவடிக்கை எடுத்து வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வெண்டும். |